2020/7/30

சுற்றுநிருப இலக்கம் : 14/2020

சகல மாகாண கல்விச் செயலாளர்களுக்கும்,
சகல மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும்,
சகல கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும்,
சகல பிரிவெனாக்களுக்கும் பொறுப்பான மதகுருமார்களுக்கும்,
சகல அதிபர்களுக்கும்,
சகல தனியார் பாடசாலை தலைமை நிருவாகிகளுக்கும்,
சகல சர்வதேச பாடசாலை தலைமை நிருவாகிகளுக்கும்,

**''நாட்டுக்குப் பெறுமதியான நூலொன்று''10,000 நூல்கள் எழுதும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - திருத்தம்**

என்னால் வெளியிடப்பட்ட 2020.04.23 ஆம் திகதிய 14/2020 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைவாக நடைமுறைப்படுத்தப்பட்ட,''நாட்டுக்குப் பெறுமதியான நூலொன்று'' எழுதும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் எனது 2020.07.02 ஆம் திகதிய ED/09/96/01/08/02 ஆம் இலக்கக் கடிதத்திற்கு அமைவாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டது.

14/2020 ஆம் இலக்க சுற்றுநிருபம் கீழ்க் காட்டப்படுகின்றவாறு திருத்தியமைக்கப்படுவதைத் தங்களுக்கு அறியத்தருவதோடு அச்சுற்றுநிருபத்திற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

**''நாட்டுக்குப் பெறுமதியான நூலொன்று''10,000 நூல்கள் எழுதும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்துடன் தொடர்புடைய சகல மாணவர் படைப்புக்களையும் பாடசாலைகளிடம் ஒப்படைக்க வேண்டிய இறுதித் திகதி 2020 ஜுலை மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.**

பாடசாலைகளுக்கு ஒப்படைக்கப்படும் படைப்புக்கள் மேற்படி தினத்தின் பின்னர் முறையே கோட்டக் கல்விக் காரியாலயம், வலயக் கல்வி அலுவலகம்,மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் உரிய மாகாணக் கல்வித் திணைக்களங்களினூடாக மாணவர் படைப்புக்கள் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

| | |
|---|---|
| பாடசாலைகளினூடாக கோட்டக் கல்விக் காரியாலயங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் தினம் | 2020 ஆகஸ்ட் 05 |
| கோட்டக் கல்விக் காரியாலயங்களினூடாக வலயக் கல்வி அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் தினம் | 2020 ஆகஸ்ட் 12 |
| வலயக் கல்வி அலுவலகங்களினூடாக மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய இறுதித் தினம் | 2020 ஆகஸ்ட் 20 |

மாகாணக் கல்வித் திணைக்களங்களினூடாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய தினம் மாகாண வாரியாகக் கீழ்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மேல் மாகாணம் : 2020ஆகஸ்ட் 26 | ஊவா மாகாணம் : 2020செப்டெம்பர் 02 |
| மத்திய மாகாணம் : 2020ஆகஸ்ட் 27 | கிழக்கு மாகாணம் : 2020செப்டெம்பர் 04 |
| வட மாகாணம் : 2020ஆகஸ்ட் 28 | சப்ரகமுவா மாகாணம் : 2020செப்டெம்பர் 08 |
| தென் மாகாணம் : 2020ஆகஸ்ட் 31 | வடமேற்கு மாகாணம் : 2020செப்டெம்பர் 09 |
| வடமத்திய மாகாணம் : 2020செப்டெம்பர் 02 | |

உரிய மாகாணக் கல்வித் திணைக்களங்களினூடாக சகல மாணவர் படைப்புக்களும் மாணவர்களின் விபரங்கள் (பிள்ளையின் பெயர், நூலின் பெயர், பாடசாலையின் பெயர் மற்றும் முகவரி, கல்வி கற்கும் தரம்) அடங்கிய பட்டியலுடன் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

உரிய பாடசாலையினால் பரீட்சிக்கப்பட்டு ஒப்படைக்கப்படுகின்ற மாணவர் படைப்புக்கள் மேலும் பரீட்சிக்கப்படுவது தேவையற்றதென்பதால் ஒட்டுமொத்த படைப்புக்களும் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையினால் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை www.natlib.lkஎனும் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் இணையதளத்தினுள் பிரவேசித்துப் பெற்றுக் கொள்ளலாம். இது தொடர்பான சிக்கல்கள் ஏதுமிருப்பின் 0112698847 / 0113610773 எனும் தொலைபேசி இலக்கங்களுக்கூடாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் நூலக மேம்பாடு, தரநிலைகள் மற்றும் வெளியீட்டுப் பிரிவின் பணிப்பாளரைத் தொடர்பு கொள்ளலாம்.

ஏ. எச். எம். சித்ரானந்த,

செயலாளர்,

கல்வியமைச்சு